செ.வெ.எண் : 11/ மே                                                                                   நாள் : 10.05.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முழு ஊரடங்கின் போது அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டு நெறிமுறைகளை முறையே செயல்படுத்திட வேண்டும்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்குஉத்தரவு**

இராமநாதபுரம் அருகே உள்ள குயவன்குடி கிராமத்தில் உள்ள கொரோ பாதுகாப்பு மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள படுக்கைகளை பார்வையிட்டார். (09.05.2021)

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 1288 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 882 பேர் அவர்களது சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 76,187 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்கிட ஏதுவாக இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை உட்பட அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1500 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 4 தனியார் மருத்துவமனைகளில் 200 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி, பரமக்குடி அழகப்பா கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி ஆகிய 4 இடங்களில் கொரோனா பாதுகாப்பு மையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் மொத்தம் 425 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சிகிச்சைக்கு தேவையான ஆக்சிஜன் உட்பட உயிர் காக்கும் மருந்துகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இராமநாதபுரம் அருகே உள்ள குயவன்குடி கிராமத்தில் உள்ள தனியார் அறக்கட்டளையின் பயிற்சி மையக் கட்டடத்தில் கூடுதலாக கொரோனா பாதுகாப்பு மையம் ஏற்படுத்தி போதிய படுக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உறுதி செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது, சம்மந்தப்பட்ட பாதுகாப்பு மையத்தில் 60 படுக்கைகள் அமைத்திடவும், பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்படும் பொதுமக்கள், சிகிச்சை பணியில் ஈடுபடும் மருத்துவர்கள், பணியாளர்களுக்கு தேவையான கழிப்பறை வசதி, சுத்தமான குடிநீர் வசதி ஆகியவற்றை உறுதி செய்திடவும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், மையத்தில் தங்க வைக்கும் பொதுமக்களுக்கு சத்தான உணவு தரமான முறையில் வழங்கிடவும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரம் நகரில் உள்ள மார்க்கெட் தெரு பகுதியில் நேரடியாக ஆய்வு செய்து, மாவட்டத்தில் 10.05.2021 முதல் 24.05.2021 வரை நடைமுறைப்படுத்தப்பட உள்ள இருவார முழு ஊரடங்கின் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து வணிகர்கள்/வியாபாரிகளிடத்தில் எடுத்துரைத்தார். இராமநாதபுரம் நகரில் காய்கறிகள், பழங்கள், பூக்கள் விற்பனை செய்யும் கடைகளில் கூட்ட நெரிசலை தடுக்கும் நோக்கில் இராமநாதபுரம் இராஜா மேல்நிலைப் பள்ளி மைதானம், பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகரில் இவ்விரு இடங்கள் தவிர வேறு இடங்களில் காய்கறிகள், பழங்கள், பூக்கள் விற்பனை செய்யும் கடைகள் செயல்பட அனுமதியில்லை. இதனை முறையே கண்காணித்து, முழு ஊரடங்கின்போது அரசு வரையறுத்துள்ள அனைத்து கட்டுப்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளை முறையே செயல்படுத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ம.பிரதீப் குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., வட்டாட்சியர் திரு.வி.ரவிச்சந்திரன் உட்பட அரசு அலுவலர்கள்உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**